# யாழ்ப்பாணத்தரசர்காலச் சமயநிலை ஓர் வரலாற்று நோக்கு

**G. Jeyatheeswaran**[1]

[1]Vadduwest, vaddukoddai, Jaffna, Srilanka
Postgraduate student (Mphil in History)
Department of History
University of Peradeniya.

Corresponding author's e-mail: jeyathe@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசமானது தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட தனித்துவமான பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளால் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அமைக்கப்பட்ட யாழ்ப்பாண அரசில் இந்துமதம் சிறப்புநிலை அடைந்திருந்ததை அக்கால அரச சின்னங்கள், விருதுப்பெயர்கள், ஆலயங்கள் வழிபாட்டு முறைகள் என்பன மூலமாகவும் இக்காலம் தொடர்பாக பிற்காலத்தில் தோற்றம் பெற்ற மூல இலக்கியங்களான யாழ்ப்பாண வைபவமாலை, செகராசசேகரமாலை, கைலாயமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் போன்றவற்றின் மூலமாக அறியமுடிகின்றது. இந்துமதம் இக்காலத்தில் சிறப்பு நிலை அடைந்திருந்த அதேவேளை பௌத்த, இஸ்லாம் மதங்கள் நிலவியிருந்ததையும் பிற்பட்ட காலத்தில் கிறிஸ்தவமதம் அறிமுகமாவதையும் காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்தரசர் காலச்சமயநிலையை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தரசர் காலம் தொடர்பாக பல அறிஞர்களால் ஏற்கனவே பல நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தாலும் அவர்களது படைப்புக்களில் யாழ்ப்பாணத்தரசர் காலச் சமயம் ஓர் பகுதியாகவே இடம்பெற்றுள்ளது. எனவே இக்கட்டுரை யாழ்ப்பாணத்தரசர் காலச் சமயநிலையை முதன்மைப்படுத்திய வகையில் எழுதப்படுகின்றது.

இக்கட்டுரை யாழ்ப்பாண அரசர் காலச்சமய நிலையை ஆராயும்போது யாழ்ப்பாண அரசர் காலத்திற்கு முன்னான சமய நிலையையும், யாழ்ப்பாண அரசர்களது சமய நிலையையும் அரசில் இடம்பெற்ற சமய சின்னங்கள், கோயில்கள், வழிபாட்டு முறைகள், பிற மதங்கள் என்பவற்றையும் ஆய்வு செய்கின்றது. இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இந்துமதம் உச்சநிலை அடைந்திருந்தது என்பதை அடையாளப்படுத்தவும், அக்காலத்தில் இருந்த பண்பாட்டுச்சின்னங்களை ஆவணப்படுத்தவும், இன்றைய பண்பாட்டில் அக்காலப் பண்பாட்டுச் செல்வாக்கை அடையாளம் காணவும் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வுக்கான முதலாம் தரத்தரவுகளாக தொல்லியல் எச்சங்களான கட்டடச்சான்றுகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், இக்காலம் தொடர்பாக கூறஎழுந்த மூலநூல்கள் என்பவற்றையும், இரண்டாம்தரத் தரவுகளாக இக்காலம் தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்களது நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், மற்றும் சஞ்சிகைகள், இணையத்தகவல்கள் என்பவற்றையும் ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

பிரதான சொற்பதங்கள்: இராச்சியம், அரண்மனை, கோயில்,தேவாலயம், யாத்திரை

**ஆய்வுக்கோர் அறிமுகம்**

இலங்கை வரலாற்றில் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட பிராந்தியமாக அதன் வடபகுதி விளங்குகின்றது. இவ் வடபகுதியானது பாளி இலக்கியங்களிலும் பண்டைய தமிழ் நூல்களிலும் நாகநாடு,நாகதீப,நாகதீபம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து அரச மரபு ஒன்று நிலவி வந்ததாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டாலும் கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் ஆரியச்சக்கரவர்த்திகளால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு சுதந்திரமான ஓர் அரசு நிறுவப்பட்டதை ஆதாரங்களுடன் குறிப்பிடுகின்றனர்(இந்திரபாலா,1972:29-56). இவ் அரசு "யாழ்ப்பாண அரசு" என்ற பெயரைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாணஅரசானது யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதுசார்ந்த தீவுகளையும், வன்னியின் சில பகுதிகளையும், மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியவகையில் யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்டுவந்தது(perera,1930:51). இவ்வரசு கி.பி 17 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையும் வரை அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைகளில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததென்பதை பிற்காலத்தில் யாழ்ப்பாண அரசு தொடர்பாக கூற எழுந்த இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது. இந்நூல்கள் தரும் தகவலின் அடிப்படையில் இக்காலத்தில் நிலவியிருந்த சமய நிலைபற்றி நோக்கும்போது யாழ்ப்பாணத்தரசர்கள் இந்துக்களாக விளங்கியதனால் இந்துப் பண்பாடும் இந்துமத மரபுகளும் உச்சநிலை பெற்றிருந்ததை காணமுடிகின்றது. அதேவேளை இவ் இராச்சியத்தில் பௌத்தர்களும், இஸ்லாமியர்களும் வாழ்ந்துவந்தமை தொடர்பாகவும் அறியமுடிகின்றது. ஐரோப்பியர்களான போர்த்துக்கேயரது வருகையைத் தொடர்ந்தே இவ்அரசின் இறுதிக்காலத்தில்கிறிஸ்தவ மதம்

ஊடுருவியதையும் அறியமுடிகின்றது. எனினும் யாழ்ப்பாணத்தரசர்களால் வளர்க்கப்பட்டு வந்த இந்துமதம் பிற்பட்ட காலத்தில் பிற மதத்தின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் நிலை பெற்று யாழ்ப்பாணத்தரசர் காலத்தை நினைவூட்டிவருவதைக் காணலாம்.

**யாழ்ப்பாணத்தரசர் காலத்திற்கு முன்பான சமயநிலை**

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இந்துமதப் பண்பாட்டு அம்சங்கள் உச்ச நிலை அடைந்திருந்த அதேவேளை தற்காலத்தில் நாம்காணும் இந்துப்பண்பாட்டு அம்சங்கள் வளர்ச்சியடைந்த காலப்பகுதியாகவும் விளங்குகின்றது. ஆனால் இவ் இந்துப்பண்பாட்டு அம்சங்கள் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் வளர்ச்சியடைந்திருப்பதற்குக் காரணம் பண்டைக்காலத்திலிருந்து இம்மரபுகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பேணப்பட்டு வந்ததை குறிப்பிடலாம். ஏனெனில் இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர்,நாகரது வழிபாட்டு அம்சங்கள் இவற்றிற்கு அடித்தளமாக விளங்கியிருப்பதுடன் வடபகுதியான நாகநாட்டில் தனித்துவமாக இந்துமதம் வளர்ச்சியடைவதற்கும் காரணமாகியது(சிற்றம்பலம்,1992:7). இதன்காரணமாகவே இலங்கைக்கு பௌத்தம் பரவலடைவதற்கு முன்பிருந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் சைவர்களாக இருந்தார்கள் என்பதை ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவர்கள் தமது பெயருடன் ‘‘சிவ’’ எனும் பெயரை இணைத்திருப்பதைக் காணலாம். பண்டுவாசுதேவனின் குமாரரில் ஒருவனது பெயர் சிவ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டுகாபயனின் மாமனில் ஒருவன் கிரிகந்தசிவ எனக்குறிப்பிடப்பட்டுள்ளான். இவனே அநுராதபுரத்தை இராசதானியாக அமைத்தான் எனக் கூறப்படுகின்றது(பத்மநாதன,2011:64). இதனை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையிலேயே இந்துமதப் பண்பாட்டு அம்சங்கள்பண்டையகாலத்தில் பின்பற்றப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. வடபகுதியில் பண்டைக்காலத்திலிருந்தே இந்துப்பண்பாடு நிலவியதென்பதை ஆதிக்குடிகள் வாழ்ந்த இடங்களான கந்தரோடை,ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்போது பெறப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் மூலம் அறியமுடிகின்றது. கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது திரிசூலம் போன்ற உலோகச்சின்னம் கிடைத்துள்ளமையும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது கிடைக்கப்பெற்ற முத்தலைச் சூலம் போன்ற வடிவிலுள்ள சின்னங்களும் சிவசின்னங்களாக கருதப்படுவதன் மூலம் இக்காலத்தில் இந்துமதப் பண்பாடுகள் நிலவியிருந்ததை அறியமுடிகின்றது(பத்மநாதன்,2011:64)

பண்டைக்காலங்களில் வாழ்ந்த மக்களிடையேஇந்துமதம் செல்வாக்குப் பெற்றிருந்ததென்பதை அவர்கள் பயன்படுத்திய நாணயங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது. சிவ சின்னமாகிய இடபத்தின் உருவம் பொறித்த நாணயங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளிலும் அவற்றுக்குப் பிற்பட்ட காலத்திலும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்காலத்தில் பயன்பாட்டிலிருந்த லக்ஷ்மி நாணயங்களில் சைவ சமயச் சின்னங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதில் உள்ளதேவதையின் வடிவம் ஸ்தானக் கோலத்தில் அமைந்திருப்பது போல் தெரிவதால் நாணயவியலாளர் இதனை இலக்குமி நாணயங்கள் எனக்குறிப்பிட்டுள்ளனர். இவ்வகை நாணயங்களில் சிவலிங்கம் காணப்படுவதுடன் சிலவற்றில் சுவஸ்திகமும் அதனோடு இடபம், ஆவுடையார்,இலிங்கம் என்பனவும் காணப்படுகின்றன. சிலவற்றில் இலிங்கத்திற்குப் பதிலாக பூரணகும்பமும் வேறுசிலவற்றில் சிவனுக்குரிய திரிசூலமும், மழுவும் காணப்படுகின்றன. சில லக்ஷ்மி நாணயங்களின் பின்புறத்தில் சுவஸ்திகத்தின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் இடபம் பொறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது(புஸ்பரட்ணம்,2000:100-109). சில நாணயங்களில் திரிசூலம், வேல் ஆகியவை பதிக்கப்பட்டிருப்பது முருகவழிபாட்டின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். அதுபோல் பண்டைய இலக்கியங்களில் ஆதியில் வாழ்ந்த மக்கள் கோணேஸ்வரம்,கேதீஸ்வரம் ஆகிய தலங்களை வழிபட்டமை தொடர்பாக அறிவதன் மூலம் இக்காலத்தில் சிவவழிபாடு இடம்பெற்றிருந்தமை பற்றி அறியமுடிகின்றது. இவ் ஆதாரங்களின் அடிப்படையில் பண்டைக் காலத்திலிருந்தே இந்துமதம் நிலவியிருந்ததென்பதை அறியமுடிகின்றது.

கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு பௌத்தமதம் அறிமுகமானதைத் தொடர்ந்து பௌத்தப்பண்பாடு அதன் பல பகுதிகளிலும் ஏற்படத்தொடங்கியது. இத் தாக்கம் வடபகுதியான நாக நாட்டிலும் ஏற்பட்டதைத் தொடர்ந்து இங்குவாழ்ந்த மக்கள் பௌத்த மதத்தை பின்பற்றத் தொடங்கினர். இவற்றை பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள்வாழ்ந்த இடங்களாக அடையாளம் காணப்பட்ட கந்தரோடை, வேலணை, நெடுந்தீவு,ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கிடைத்த ஆதாரங்களின் மூலம் அறியமுடிகின்றது. இவற்றில் கந்தரோடையில் காணப்படும் பௌத்தப் பண்பாட்டுச் சின்னங்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரங்களாக இன்றும் விளங்குகின்றன. மேலும் இவை தொடர்பாக கந்தரோடையில் கிடைத்த கலவோடு ஒன்றில் காணப்படும் அபிசிதன் என்றவாசகமும், வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொன்னேடும் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பௌத்தமதம் நிலவியதற்கான முக்கிய சாசன ஆதாரங்களாக விளங்குகின்றன(கிருஷ்ணராசா,2012:43). இவ்வாறு வடபகுதியில்பரவியிருந்த பௌத்தமதம் பிற்பட்ட காலத்தில் செல்வாக்கிழக்கத் தொடங்கியது. இதற்கு வடபகுதியில் காலத்திற்குக் காலம் இடம்பெற்றுவந்த தென்னிந்திய அரசுகளது செல்வாக்கு ஓர் காரணம் எனவும், அச்செல்வாக்கின் பின்னணியில் பிற்பட்டகாலத்தில் யாழ்ப்பாணத்தில் தோற்றம்பெற்ற

யாழ்ப்பாண அரசு இந்து அரசாக விளங்கியதால் பௌத்தமதம் மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்பாகியது என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**யாழ்ப்பாணத்தரசர்களும் சமயமும்**

யாழ்ப்பாணத்தரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். இதனால் இவர்கள் தமது அரசியல் நடவடிக்கையின்போது இந்துமதத்திற்கே முன்னுரிமை வழங்கிவந்தனர். வேதத்திலும் வேதகலாச்சாரத்திலும் பெருவிருப்புக் கொண்ட இவர்கள் சைவசமயத்தை வளர்க்கும் வகையில் வடமொழியையும், தமிழையும் வளர்ப்பதில் அதீத ஈடுபாடு காட்டினர்(சிற்றம்பலம்,1992:194). யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் ஒன்றான செகராசசேகரமாலை ஆரியச்சக்கரவர்த்திகள் பற்றி குறிப்பிடும்போது இவர்களின் மூதாதையோர் கோயில்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்றும் அவர்களில் சிலர் அரசசேவையில் இணைந்து உயர் பதவிகளைப் பெற்றதன் பயனாக ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர் எனக் கூறுகின்றது. மேலும் அந்நூல் குறிப்பிடும் போது அவர்களில் சிலர் பாண்டியரின் சேனாதிபதிகளாக பணியாற்றினார்கள் எனவும் பாண்டியரது படையெடுப்பு வடஇலங்கையில் இடம்பெற்றபோது இதில் சேனாதிபதியாக வருகை தந்தவர்கள் நல்லூரில் வாழ்ந்து வந்ததாகவும் அச் சேனாதிபதிகளின் வழிவந்தவர்களாலேயே யாழ்ப்பாண அரசு தோற்றுவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது (பத்மநாதன்,1978:234). இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் பிராமணர் குலத்தை சேர்ந்தவர்கள் என்பதால் யாழ்ப்பாண அரசில் இந்துமதம் செல்வாக்குப்பெற்ற மதமாக விளங்கியிருந்ததெனலாம்.

**அரச சின்னங்களும் விருதுப் பெயர்களும்**

யாழ்ப்பாணத்தரசர்கள் இந்துமதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்ததனால் தமது அரசிலும் அரச சின்னங்களிலும் விருதுப் பெயர்களிலும் இந்துமதப் பண்பாட்டை இணைத்திருந்தனர்.அவ்வகையில்இவர்கள் தமது விருதுப் பெயர்களாக சேதுகாவலன்,தேவையர்கோன், கங்கையாரியன், போன்ற பெயர்களைச் சூட்டியிருந்தனர் என்பதை இலக்கியங்கள் ஊடாக அறியமுடிகின்றது. இப்பெயர்களில் வரும் சேது என்பது இராமர்கதை மரபுடன் தொடர்புடைய இராமேஸ்வரத்தில் காணப்படும் புனித தலமாகவும் அதனுடன் இணைந்துள்ள கடற்பிரதேசமான சேது சமுத்திரத்தையும் நினைவூட்டுகின்றது. கங்கை என்பது இந்துக்களது புனித தீர்த்த தலங்களில் ஒன்றாகக் கருதப்படுவதால் அவற்றை பிரதிபலிக்கும் வகையில் தமது விருதுப் பெயர்களை அமைத்திருந்தனர்(பத்மநாதன்,1978:180-181) . ஆரியச்சக்கரவர்த்திகள் அமைத்திருந்த இவ் விருதுப் பெயர்கள் இந்துப் பண்பாட்டை பிரதிபலிப்பதுடன் அவர்களது சமயாபிமானத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்துமதத்தை பிரதிபலிக்கும் வகையில் தமது விருதுப்பெயர்களை சூட்டியிருந்த இவர்கள் தமது சமயாபிமானத்தை வெளிப்படுத்தும் முகமாக அரச சின்னங்களிலும் இந்துமதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததைக் காணலாம். சிவ சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் நந்தியின் வடிவை தமது கொடியிலும், இலச்சனையிலும் முத்திரைகளுள் ஒன்றாகவும் பயன்படுத்தி வந்தனர்(Rasanayagam,1926:296). மேலும் இவர்கள் வெளியிட்ட நாணயங்கள் பலவற்றிலும் நந்தியின் உருவத்தைப் பொறித்துள்ளனர். அதன் மேற்பக்கத்தில் சிவனின் சடாமுடியில் அமைந்துள்ள பிறை போன்ற வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்கள் வெளியிட்ட சில நாணயங்களில் முருகவழிபாட்டை பிரதிபலிக்கும்வகையில் மயிலின் உருவம் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர்(புஸ்பரட்ணம்,2000:205). இவை அனைத்தும் அவர்களது இந்துமதத்தின் மீதான அபிமானத்தைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன.

**யாழ்ப்பணத்தரசர்களது தலைநகரமும் இந்துப்பண்பாடும்**

ஆரியச்சக்கரவர்த்திகள் தமது அரசியல் நடவடிக்கைகளின் போது இந்துமதத்திற்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தார்கள் என்பதை இலக்கியங்கள் தரும் தகவலின் அடிப்படையிலும், இவர்கள் காலப்பண்பாட்டை பிரதிபலிக்கும்வகையில் தலைநகரில் அமைந்துள்ள ஆலயங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது. அவ்வகையில் ஆரியச்சக்கரவர்த்தி தலைநகரான நல்லூரிலே அரசமாளிகையை அமைக்கும்போது இந்துமத அநுட்டானங்களை கடைப்பிடித்திருந்ததாகவும் அரண்மனையை சுற்றி இந்துமத பண்பாட்டம்சங்களின் பிரதிபலிப்புக்களான ஆலயங்களை அமைத்திருந்ததையும் காணலாம். இது தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை தரும் தகவலை நோக்கும்போது “யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த சிங்கையாரியன் நல்லூரில் அரசநகர், அரசமாளிகை, கூடகோபுரம், பூங்கா,ஸ்நான மண்டபம்,முப்படைக்கூபமும் உண்டாக்கி கூபத்தில் யமுனாநதித் தீர்த்தமும் கலந்து, நீதிமண்டபம், யானைப்பந்தி, சேனாவீரர் இருப்பிடம் முதலான ஐந்தும் கட்டுவித்து பிராமணரை இருத்தி கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோயிலையும், வடதிசைக்கு சட்டநாதேஸ்வரர் கோயில், தையல் நாயகியம்மன் கோயில், சாலை விநாயகர் கோயிலையும் அமைத்திருந்தான் எனக் கூறுகின்றது(சபாநாதன்,1949:25). இதுவரை கிடைக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் அவைநல்லூர் இராசதானியை சுற்றி காவலுக்கு அமைக்கப்பட்ட கோயில்களாக விளங்குகின்றன. இவற்றினூடாக இக்கோயில்களில் உள்ள

சிவன், அம்மன், பிள்ளையா் ஆகிய தெய்வங்கள் இக்காலத்தில் காவற்தெய்வங்களாக வழிபடப்பட்ட மரபையும் அறியமுடிகின்றது. இவ் ஆலயங்கள் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட பின்னர் மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் அவ் இடங்களில் அமைக்கப்பட்டன. இவையே இன்று நாம் காணும் ஆலயங்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. எனவே நல்லூர் இராசதானியைச் சுற்றி அமைக்கப்பட்ட இவ் ஆலயங்கள் யாழ்ப்பாணத்தரசர் கால இந்துப்பண்பாட்டை பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்தரசர்கள் இந்துமதத்தில் சிறப்பிடம் பெற்றிருந்த மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய வழிபாட்டு மரபுகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தார்கள் என்பதை அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்களின் மூலமாக அறியமுடிகின்றது. இதேவேளை இவர்கள் புனித தீர்த்தவழிபாட்டிலும்ஈடுபாடு காட்டியிருந்தார்கள் என்பதை அவர்கள் அமைத்திருந்த முப்படைக்கூபமாகிய யமுனாஏரி தெரியப்படுத்துகின்றது. யமுனாஏரி தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை தரும் தகவலை நோக்கும் போது சிங்கைப்பரராசசேகரன் வடஇந்தியாவின் யமுனை ஆற்றிலிருந்து திவ்விய தீர்த்தத்தை காவடிகளில் கொண்டுவந்து தலைநகர் அந்தஸ்துடைய நல்லூரில் ஓர் ஏரி அமைத்து அதில் கலந்துவிட்டதால் அரச அந்தஸ்துடனாக்கப்பட்ட யமுனா ஏரி என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது(சிற்றம்பலம்,1992:196). இப்புனித தீர்த்தம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் இந்துமரபின்படி முடிசூட்டப்படும் மன்னர் புனித நதிகளின் நீரால் அபிடேகம் செய்யும் வழக்கத்தை பின்பற்றியிருந்ததால் யாழ்ப்பாண மன்னர்களும் தமது பட்டாபிஷேக தேவையை ஈடுசெய்யும்முகமாக இப்புனித நீரை இவ் ஏரியில் கலந்து அம்மரபை பேணிவந்திருக்கலாம். இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தரசர்கள் இந்துமத மரபில் காணப்பட்ட புனித தீர்த்த வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள் என்பதை அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தரசர்களால் தலைநகரில் அமைக்கப்பட்டிருந்த கந்தன் ஆலயமும் அவர்களது சமயாபிமானத்தைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாலயட் தொடர்பாக யாழ்ப்பாணவைபவமாலை, கைலாயமாலை போன்ற இலக்கியங்கள் பல தகவல்களைத் தருகின்றன. அவற்றின் அடிப்படையில் இவ் ஆலயம் யாழ்ப்பாண ஆட்சியாளரது அரண்மனையாகவும், அதிகாரபீடமாகவும், அரசபாதுகாப்பு அரணாகவும், அரசசெயலகத்தின் குறியீடாகவும், அக்காலப் பண்பாட்டின் மையமாகவும் திகழ்ந்தது. அப்பாரம்பரிய வரலாற்று நம்பிக்கையின் விளைவுதான் இன்றும் ஏனைய பல ஆலயங்களுக்கு இல்லாத பெருமையும் சிறப்பும் இக்கோயிலுக்கு இருப்பதற்கு காரணமாகும். நல்லூர் கந்தன் ஆலயம் பல சிறப்புக்களைக் கொண்டிருக்கும் அதேவேளை அதன் தோற்றம் தொடர்பாக அறிவதற்கு தெளிவான தகவலைப் பெறமுடியாதுள்ளது. எனினும் இவ் ஆலயம் கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாண அரசுமீது படையெடுப்பை மேற்கொண்டபோது அவனது படையெடுப்பிற்கு தலைமைதாங்கி வந்த செண்பகப்பெருமாள் (குணசிங்கம்,2008:135) எனும் படைத்தளபதியால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாலயம் அழிக்கப்பட்டதாகவும் பின்னர் அவன் 17 ஆண்டுகள் இப்பகுதியை ஆட்சிசெய்தபோது அவனால் இவ்வாலயம் மீண்டும் நிர்மாணிக்கப்பட்ட தெனவும் கூறப்படுகின்றது. இவ்வாலயம் அக்காலத்தில் இன்று முத்திரைச்சந்தியில் காணப்படும் புரட்டஸ்தாந்து தேவாலயம் அமைந்துள்ள இடத்திலேயே அமைந்திருந்தது. போர்த்துக்கேயரது வருகையைத்தொடர்ந்து இவ்வாலயம் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் கத்தோலிக்கத் தேவாலயம் அமைக்கப்பட்டது(குணசிங்கம்,2008:186) பின்வந்த ஒல்லாந்தரால் இக் கத்தோலிக்கத் தேவாலயம் புரட்டஸ்தாந்து தேவாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதன் பின்னான காலத்திலேயே இன்று நாம் காணும் நல்லூர் கந்தன் ஆலயம் புதியதோர் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந் நல்லூர் முருகன் ஆலயம் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் அரச ஆதரவு பெற்றதலமாகவும் அரசின் மத்திய நிலையமாகவும் விளங்கியிருந்ததன் காரணத்தாலே இன்றும் யாழ்ப்பாணத்தவரது பண்பாட்டின் அடையாளமாக அனைவராலும் பார்க்கப்பட்டு வருகின்றது.

**யாழ்ப்பாணத்தரசர்காலத்தில் வழிபாட்டுத்தலங்கள்**

யாழ்ப்பாண இராச்சியத்தில் யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அண்டியிருந்த தீவுகளும் அதற்கப்பால் வன்னியின் சிலபகுதிகளும், மாந்தை, திருகோணமலை என்பனவும் உள்ளடங்கியிருந்தன. இப்பிரதேசத்தில் அமைந்திருந்த ஆலயங்கள் பல ஆரியச்சக்கரவர்த்திகளது ஆதரவுபெற்ற தலங்களாகக் காணப்பட்டதுடன் அவர்களால் வழிபடப்பட்ட தலங்களாகவும் விளங்குவதன் மூலம் அவை யாழ்ப்பாணத்தரசர்காலச் சமயநிலையை பறைசாற்றுபவையாக உள்ளன. இத் தலங்கள் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட முருக வழிபாட்டையும், விநாயகர் வழிபாட்டையும், சிவவழிபாட்டையும், விஷ்ணு, சக்தி போன்ற ஏனைய கடவுள் வழிபாட்டு முறைகளையும் பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன.

***முருக வழிபாட்டுத்தலங்கள்***

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த முருகவழிபாட்டுத்தலங்களாக நல்லூர் கந்தன் ஆலயத்தை அடுத்து மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் விளங்குகின்றது. இக்கோயில் தொடர்பாக 1ஆம் இராசேந்திர சோழனது கல்வெட்டொன்றும், யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் ஆகியவை தகவல் தருகின்றன. இவ் இலக்கியங்களில் உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதையுடன் இவ்ஆலயமும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதன் மூலம் பழமைமிக்க முருகவழிபாட்டிற்கு சான்றாய் இருப்பதுடன் தொடர்ந்து யாழ்ப்பாணத்தரசர் காலத்திலும் சிறப்புப்

பெற்றிருந்ததெனலாம்(சிற்றம்பலம்,1992:203). இவ் ஆலயத்தை அடுத்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், கதிர்காமக் கந்தன் ஆலயம், கந்தவனக்கடவை முருகன் ஆலயம் ஆகியவை இக்காலத்தில் வழிபடப்பட்ட முருக வழிபாட்டுத் தலங்களாக விளங்குகின்றன. அத்துடன் இக்காலப்பகுதியில் கதிர்காமத்திற்கான யாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டமை பற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதைக் கொண்டு (சிற்றம்பலம்,1992:204)ஆரம்பகாலங்களிலிருந்தே யாத்திரை செல்லும் வழக்கத்தை இக்கால மக்கள் பின்பற்றியிருந்ததை அறியமுடிகின்றது.

***சைவ வழிபாட்டுத் தலங்கள்***

யாழ்ப்பாணத்தரசர் காலத்திற்கு முன்பே சிவவழிபாடு சிறப்புப்பெற்றிருந்ததை யாழ்ப்பாணத்தின் நகுலேஸ்வரர் ஆலயமும், மாந்தையில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரமும், திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரமும் பறைசாற்றுகின்றன. இவற்றில் நகுலேஸ்வரர் ஆலயம் தமிழ்அரச உருவாக்கத்துடன் தொடர்புபட்ட உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதை மரபுடன் தொடர்புபட்ட வகையில் ஆரம்பகாலத்திலிருந்தே செல்வாக்குப்பெற்றிருந்தது. தொடர்ந்துவந்த யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இவ் ஆலயம் அரச ஆதரவு பெற்ற தலமாக விளங்கியதுடன் அவர்கள் தீர்த்தமாடி சிவதரிசனம் பெற்றதலமாகவும் விளங்கியிருந்ததென்பதை மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் போர்த்துக்கேய ஆவணங்களில் யாழ்ப்பாண அரசர் தமது வருமானத்தில் ஒரு பகுதியை இவ் ஆலயத்திற்கு செலுத்திவந்தமை பற்றியும் அறியமுடிகின்றது. யாழப்பாணத்தரசர் காலத்திலும் திருக்கோணேஸ்வரமும்,திருக்கேதீஸ்வரமும் சிறப்புப்பெற்றிருந்ததை அறியமுடிகின்றது. கோணேசர் ஆலயத்திற்கு ஆரியச்சக்கரவர்த்திகள் மூவர் திருப்பணிகள் மேற்கொண்டமை பற்றி கோணேசர் கல்வெட்டு தகவல் தருகின்றது(சிற்றம்பலம்,1992:209). மேலும் கைலாயமாலையில் யாழ்ப்பாணத்தரசர்கள் நல்லூரில் கைலாசநாதர் எனும் சிவாலயத்தை நிர்மாணித்திருந்தமை பற்றிய தகவலை அறியமுடிகின்றது. இச்சிவாலயங்கள் தவிர ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் ஆலயம் ஆகியவை சிறப்புப் பெற்ற சிவதலங்களாக விளங்கி யாழ்ப்பாண அரசர்கால சிவவழிபாட்டிற்கு சான்றுகளாகஅமைகின்றன.

***ஏனைய வழிபாட்டுத் தலங்கள்***

இக்காலத்தில் விநாயகர், அம்மன், விஷ்ணு ஆகிய கடவுளர்க்கு ஆலயங்கள் அமைத்து வழிபடும் வழக்கம் நிலவியிருந்ததென்பதை அக்காலத்தில் அமைந்திருந்த ஆலயங்கள் மூலம் அறியமுடிகின்றது. அவ்வகையில் விநாயகர் வழிபாடு சிறந்திருந்ததென்பதை இணுவிலில் அமைந்துள்ள பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயம், மருதடி விநாயகர் ஆலயம் என்பவை மூலமாக அறியமுடிகின்றது. விஷ்ணுவழிபாடு சிறப்புப் பெற்றிருந்ததென்பதை வல்லிபுர ஆழ்வார் கோயில் மூலமாகவும் பொன்னாலை விஷ்ணு ஆலயம் மூலமாகவும் அறியமுடிகின்றது. இக்காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு நிலவியிருந்ததென்பதை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயமும், சீரணி நாகம்மாள் ஆலயங்களும் பறைசாற்றி வருகின்றன(சிற்றம்பலம்,1992:217-226).

**கிராமியத்தெய்வ வழிபாடு**

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் கடவுளர்க்கு பெருங்கோயில்கள் அமைத்து வழிபடப்பட்டுவந்த அதேவேளை கிராமங்களில் கிராமியத்தெய்வங்களை வழிபடும் மரபு பின்பற்றப்பட்டு வந்ததையும் காணலாம். இக்காலத்தில் வழிபடப்பட்டுவந்த கிராமியத்தெய்வங்களாக வைரவர், வீரபத்திரர், காளி, ஐயனார், அண்ணமார், மாரியம்மன், நாச்சிமார், கண்ணகிஅம்மன், நாகதம்பிரான், முனியப்பர், ஆகியவை விளங்குகின்றன(சிற்றம்பலம்,1992:227). இத்தெய்வங்களுக்கு பொங்கல் பொங்கியும், மடை பரவியும், படையல் படைத்தும் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். இதேவேளை கெடுதலை மேற்கொள்ளும் தெய்வங்களான விறுமர், இங்கரர், காடேறி, கல்லெறிமாடன், ஆகியவை துஸ்டசக்திகளை வேண்டுவோரால் வழிபடப்பட்டு வந்தன.

**வழிபாட்டு முறைகள்**

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இருவகையான வழிபாட்டு முறைகளான ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டிருந்த தென்பதை இக்காலத்தில் தோற்றம் பெற்றிருந்த கோயில்கள் மூலமாகவும்கடவுள் வழிபாட்டு முறைகள் ஊடாகவும் அறியமுடிகின்றது. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகள் கோயில்களில் பின்பற்றப்பட்டதுடன் ஆகமம் சாராத வழிபாட்டு முறைகள் கிராமியத்தெய்வ வழிபாட்டில் பின்பற்றப்பட்டிருப்பதையும் காணலாம். இதேபோல் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் யாகங்கள், கிரியை வழிபாடு என்பனவும் புனித யாத்திரை வழிபாடுகளும் நிலவியிருந்ததைக் காணலாம். இக்காலக் கோயில் வழிபாட்டில் பிராமணர் செல்வாக்குப் பெற்றதுடன் அவர்களை அடுத்துநிலஉடமையாளரது செல்வாக்கும் காணப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வழிபாட்டுத் தலங்களாக திகழும் இவ் ஆலயங்கள் சமுதாய அமைப்புடனும் உற்பத்தி முறைகளுடனும் நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தியிருக்கும் வகையில் சாதியாதாரங்களையும், சமுதாய வழமைகளையும் நிலைநாட்டும் சாதனமாக அமைந்திருப்பதையும் காணலாம்.

**பிறமதப் பண்பாடுகள்**

யாழ்ப்பாண இராச்சியத்தில் இந்துப்பண்பாடு வளர்ச்சியடைந்திருந்தாலும் இவ் இராச்சியத்திற்குட்பட்ட பகுதிகளில் யாழ்ப்பாண அரசு தோற்றம்பெற முன்பிருந்தே பௌத்த மதப் பண்பாடும், இஸ்லாமிய மதப்பண்பாடும் நிலவியிருந்ததைக் காணலாம். கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு பௌத்தம் அறிமுகமாகியதைத் தொடர்ந்து அப்பண்பாட்டுச் செல்வாக்கு வடபகுதியிலும் பரவிவந்தது. அதுபோல் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியரது வருகை இடம்பெற்றதைத் தொடர்ந்து இஸ்லாம் மதச்செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு வந்தது. யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் வருகை தந்த போர்த்துக்கேயர் மூலமாக கிறிஸ்தவ மதப் பண்பாடுகள் அறிமுகமாகியதையும் காணலாம். இவ்வகையில் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் இந்துமதம் மட்டுமன்றி பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதப் பண்பாடுகள் நிலவியிருந்ததைக் காணலாம்.

***பௌத்தமதம்***

யாழ்ப்பாணத்தரசர் காலத்திற்கு முன்பிருந்தே யாழ்ப்பாணத்தில் பௌத்தமதப் பண்பாடு நிலவியிருந்ததை பாளி இலக்கியங்களும், தொல்லியல் எச்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன. பௌத்தமத எச்சங்கள் காணப்படும் இடங்களான கந்தரோடை, நெடுந்தீவு,வேலணை போன்ற இடங்களில் பெறப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள் இதனை உறுதிசெய்கின்றன. இவ்வாறு நிலவி வந்த பௌத்தப்பண்பாடு கி.பி 6 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட நாயன்மார்களது பக்தி இயக்கங்களின் தாக்கத்தினாலும், கி. பி 10 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழரது படையெடுப்பின் காரணமாகவும், கி.பி 13 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மாகனது படையெடுப்பின் காரணமாகவும் செல்வாக்கிழந்து வந்தவேளை யாழ்ப்பாண அரசின் தோற்றத்துடன் பெரும் பின்னடைவை சந்தித்து வந்ததால் காலப்போக்கில் அது வடஇலங்கையில் கைவிடப்படும் நிலைக்குச் சென்றது(இந்திரபாலா,2006:239-255). இக்காலப்பகுதியில் நிலவிய பௌத்தப் பண்பாடுபற்றி வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகியவை குறிப்பிட்டிருப்பது அவதானிக்கத்தக்கது.

***இஸ்லாமிய மதம்***

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில்இஸ்லாமியர் வாழ்ந்தமை தொடர்பாக யாழ்ப்பாணவைபவ மாலை, வையாபாடல் என்பன தகவல் தருகின்றன. இவை தரும் தகவலினூடாக யாழ்ப்பாண அரசு காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த இவர்கள் தமது குடியிருப்புக்களை கொடிகாமம், உசன், நல்லூர் ஆகிய பகுதிகளில் அமைத்து வாழ்ந்துவந்தனர் (அருந்தவராசா,2012:17).யாழ்ப்பாண அரசில் இந்துமதம் செல்வாக்குப் பெற்றநிலையில் இருந்ததால் இஸ்லாமியப் பண்பாடுகள் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் இவர்களுக்கு யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரில் முருகன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஓர் வழிபாட்டு மையம் இருந்ததாகவும் அது பின்னர் ஆலயவழிபாட்டினால் கைவிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனை தொடர்ந்து இவர்களுக்கான வழிபாட்டிடம் பண்ணைத்துறையில் அமைக்கப்பட்டதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களது சந்ததியினரே இன்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

***கிறிஸ்தவ மதம்***

யாழ்ப்பாண அரசின் பிற்காலத்தில் குறிப்பாக 1591 இல் இடம்பெற்ற நல்லூர் உடன்படிக்கையின் பின் போர்த்துக்கேயரது செல்வாக்கு இப்பிரதேசத்தில் ஏற்பட்டதைத் தொடர்ந்து கத்தோலிக்க மதத்தவரது செயற்பாடுகள் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரம்பமாகின(குணசிங்கம்,2008:169). இந்துப்பண்பாடு நிலவிய இப்பகுதியில் இவர்களது நடவடிக்கைகளுக்கு ஆரம்ப காலங்களில் ஆதரவு கிடைக்காமலே இருந்தது. காலப்போக்கில் கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்காக போர்த்துக்கேயர் பின்பற்றிய கொள்கைகளும் மதகுருமாரது நடவடிக்கைகளும் யாழ்ப்பாண இராச்சியத்தில் கிறிஸ்தவ மதம் பரவலடையக் காரணமானது. இவ்வகையில் பிரான்சிஸ் சவேரியர் எனும் கத்தோலிக்க மதகுரு மன்னாரில் பணிபுரிந்து 600 பேரை கத்தோலிக்கராக மதம் மாற்றியிருந்தார். இதையறிந்த சங்கிலி மன்னன் மன்னாருக்குச் சென்று அவர்கள் அனைவரையும் கொன்றொழித்தான். இந்நிகழ்வால் சங்கிலி மன்னனுக்கும்

போர்த்துக்கேயருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து 1619 ஆம் ஆண்டு சங்கிலி குமாரனை கைது செய்ததன் மூலம் யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்(குணசிங்கம்,2008:172). இதைத் தொடர்ந்து போர்த்துக்கேயரால் மதமாற்ற நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வேளையில் போர்த்துக்கேயர் இந்து ஆலயங்கள் பலவற்றை அழித்து அவ்விடங்களில் கிறிஸ்தவத்தேவாலயங்களை அமைத்து வந்தனர். போர்த்துக்கேயத் தளபதியான பிலிப்டி ஒலிவேறா 500 இற்கு மேற்பட்ட ஆலயங்களை அழித்ததாக குறிப்பிட்டிருப்பதன் மூலம் இக்காலத்தில் இந்துமதம் பெரும் பின்னடைவை சந்தித்திருந்ததெனலாம்(குணசிங்கம்,2008:186) எனவே யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் பெருவளர்ச்சி பெற்றிருந்த இந்துமதப் பண்பாட்டு அம்சங்கள் பிற்பட்ட காலத்தில் அழிவுகளைச் சந்தித்த அதேவேளை கிறிஸ்தவப் பண்பாட்டு அம்சங்கள் பரவலடையத் தொடங்கியதையும் காணலாம்.

**முடிவுரை**

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் அரசமதமாக இந்துமதம் விளங்கியதன் காரணத்தால் அவ் அரசிற்குட்பட்ட பிரதேசங்களில் இந்து மதத்தை பறைசாற்றும் ஆலயங்களும் வழிபாட்டு மரபுகளும் சமய அனுட்டானங்களும் பெருவளர்ச்சியடைந்திருந்தன. அவற்றின் தொடர்ச்சியில் சில தாக்கங்கள் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டிருந்தாலும்இன்று யாழ்ப்பணத்தில் பின்பற்றப்படும் அனைத்து இந்துப் பண்பாட்டு மரபுகளும் யாழ்ப்பாணத்தரசர்காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டவையாக விளங்குவதுடன் அவர்கள் காலத்திலிருந்த ஆலயங்கள் பல மாற்றங்களை பிற்பட்ட காலத்தில் சந்தித்திருந்தாலும் இன்றும் யாழ்ப்பாணத்தரசர்கால சமயநிலையை எடுத்துக்காட்டுபவையாக விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


அருந்தவராசா,க(2012),*யாழ்ப்பாண முஸ்லிம்கள்*, நல்லூர்:அஞ்சு வெளியீட்டகம்.

இரகுநாதையர், இ.(1942),*செகராச சேகரமாலை*: கொக்குவில்.

இந்திரபாலா, க.(2006),*இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு*, கொழும்பு-சென்னை: குமரன்புத்தக இல்லம்.

இராசநாயகம்,செ.(1933),*யாழ்ப்பாணச் சரித்திரம்* : யாழ்ப்பாணம்.

இந்திரபாலா,கா.(1972),*யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்*, வட்டுக்கோட்டை, இலங்கை: யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம்.

கிருஷ்னராசா, செ.(2012) *இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்*, கொழும்பு: எபி கிறியேசன்.

குணசிங்கம்,மு.(2008),*இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு*, ஆஸ்திரேலியா: எம்.வி. வெளியீடு.

சபாநாதன்,கு.(1949),*யாழ்ப்பாண வைபவமாலை*, யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம்.சி.க.(1992),*யாழ்ப்பாண இராச்சியம்*, திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

பத்மநாதன், சி.(2011) *யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு*, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

புஷ்பரட்ணம், ப.(200),*தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு*, யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம்.

Pathmanathan.S,(1978), *The Kingdom of Jaffna*, Colombo.

Gueyroz, Fernao De *The temporal and spiritual conquest of Ceylon*, Translated by Fr.S.G.Prerera, (1930): Colombo.

Rasanayakam,C.(1926), *Ancient Jaffna*, Madras.